465

22 JUL 1940

ஓம்:

ஸ்ரீ குருப்யோ நம:

ப்ரஹ்மஸ்ரீ:

ஸ்வாமி ராமசர்மா அவர்களின்

நினைவு மலர்.



கல்லிடைக்குறிச்சி, ராஜலக்ஷ்மி பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1940.

ஸ்வாமி ராமசர்மா அவர்களால் இயற்றப்பட்ட

நூல்களின் விவரம்.

---

(1) ஸ்ரீராமகீதோபநிஷத்து: குருசிஷ்ய சம்வாத ரூபமாய், நவீனமுறையில் நாடோடியான உபமானங்களைக்கொண்டு உயரிய அத்வைதத்தை சித்தாந்தம்செய்யும் ஒரு அரிய கிரந்தம். விலை ரூ. 1

(2) பிராம்மிய கர்மம்: ஷை சித்தாந்த உண்மையெல்லாம் எளிதில் கைவர, ஒருவன் கைக்கொண்டொழுகத்தக்க சுளுவான சாதகங்களைத் திரட்டிக்கூறும் நூல். இதில்தானே ஆசிரியரது வாரப்பதிகங்கள் இரண்டும் (முருகனைப்பற்றியதும் அம்பாளைப் பற்றியதும்) உள. விலை அணா. 8

(3) வேதாந்த போத சங்கீர்த்தனை: கலியுக வரப்பிரசாதியாய் விளங்கும் முருகன் ஆதியோர்களை முன்னிட்டு, உயரிய வேதாந்த தத்துவத்தை இசைநடையில் வெளியாக்கும் ஒரு இனிய கீத நூல். விலை அணா. 8

(4) ஆத்திசூடியும் அதன் ஆன்மார்த்தமும்: ஔவையார் அருளிய ஆத்திசூடி 108-க்கும் சரளமான முறையில் விரிக்கப் பட்டுள்ள ஒரு சிறந்த உரை நூல். விலை அணா. 4

(5) இந்தியர் அறத்தின் மர்மத்திறவுகோல் (1930) காலத்திற்கியைய எழுதப்பட்ட தேசீய சம்பந்தமான சில கட்டுரைகள் அடங்கிய ஒரு சிறு நூல். விலை அணா. 4.

இவை கிடைக்குமிடம்:— சி. சுப்பய்யாவய்யர்,

சுப்பிரமணியபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி.

ஓம்:

ஶ்ரீ குருப்யோ நம:

ப்ரஹ்மஶ்ரீ:

ஸ்வாமி ராமசர்மா அவர்களின் நினைவு மலர்.

இதனுள்

அன்னாரியற்றிய

ஆத்மீக ராமாயணம், செந்திற் பதிகங்கள்

முதலியனவும் அடங்கும்.

22 JUL 1940

ஶ்ரீ ராம பக்த ஜன சபையின்

ஆதரவில்

சி. சுப்பய்யாவய்யர் என்ற ஸுப்ரஹ்மண்ய சர்மாவால்

வெளியிடப்பட்டுளது.

கலி: 5042—விக்கிரம-வருஷ ஆனி-மீ சுக்ல-ஸப்தமி.

1940.

RAJALAKSHMI PRESS,
KALLIDAIKURICHI.

181 48

ஓம்:

ஸ்ரீ குருப்யோ நம:

மெய்ந்நிலை யற்ற பொருள் தமுட் சடரான்
மேவியே நிலையென மயக்குந்
துய்ம்மைய தேது; தற் சேர்ந்தவ ரறிவிற்
றுலங்குவை நீயது வெனவே
உய்ந்நிலை யுறுத்துவ தேது, பிணிப் பற்றே
உயர்துறைச் சேருவ தேதனாலப்
பெய்ந்நிலை யதுவே தக்கிணாமூர்த்தியாம்
பேருருப் பதங்களைப் பணிவாம்.

"The Kingdom of God is not a business, set up in rivalry with worldly business; but a divine law regulating and a divine temper pervading the pursuits of worldly business. Human duties are... but great and solemn realities presented on a scene where every spectator practises, beneath the Eye of Heaven the divine art which he beholds."

"Never will one have to suffer by following the Divine in life."

ஓம்:

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்வாமி ராமசர்மா அவர்களின் நினைவு மலர்.



இயல்பல தின்றி யின்றும் இலக்கிய விலக்க ணங்கள்
சுயமெனச் சொல்லு மந்தச் சுயவடி வென்னு மென்னை
அயலெனு முருவ மாற்ற மமைந்தபல் விலக்க ணத்தைப்
புயலென நின்ற டித்தோன் பொற்கழல் சென்னி சேர்ப்பாம்.

ஓம்:

ஸ்ரீ ராம பரப்ரஹ்மணே நம:

சமர்ப்பணம்:

"It is the spiritual teacher who holds the lamp and leads us on to our journey's end."

வாழ்க்கையை ஒரு பெருங்கடலென்பர். "சம்சார சாகரம்" என்பதும் அதுவேயாம். அதில் அழுந்திவிடாது, மிதந்தோ நீஞ்சியோ கரைசேர முயலவேண்டுவதே மக்கள் கடனாகும். அம் முயற்சியின் பெருமையை உணராதவரே மாக்கள் ஆவர்: அவரே, ஆறறிவுருவம் பெற்றும் ஐயறிவின் பாற்பட்டொழுகுபவராவர்.

மக்களுள் மனதின் பயிற்சியில் தேர்ந்தவரே ஆடவராவர். தேர்ச்சியில் குறைவுபட்டியங்குபவர் தாம் பேதைமைக் குணத்திட் சிக்கியவராவர்: அவரே பேதையர்.

குறைவுளதைக் காண்பவர், முன்னரோ பின்னரோ குறைநீத்துப் பெருமை பெறுதல் திண்ணம். அங்ஙனே, பேதைமைக் குணம் தம்பால் உறைந்திருப்பதைக் காண்பவர் அதை நீக்க முற்படுதல் இயற்கை. முற்படாவிடத்து, அச்சத்தாலும் துக்கத்தாலும் பீடிக்கப்பட்டவராய், வாழ்க்கைக் கடலாம் ஆழாழியில் துரும்பென அலைந்து அழுங்குவர்.

அத்துக்கம் மிகுதிப்பட்டு விடுதலைகாண முயல்பவரே மக்களுள் மாண்புடையர்: அவரையே வடநூலார் "முமுக்ஷுக்கள்" என்பர்.

ஒருவர் கொண்டுள்ள முயற்சிக்கியைய, அவரவாது விடுதலையும் அமையும். சங்கற்பத்தை யநுசரித்ததே ஜன்மம்—என்பர்: ஒருவனது உறுதி, அதாவது ஒருவன் கொண்டுள்ள எண்ணத்தின் வன்மையைப் பொறுத்ததே அவனது பிறப்பின் தன்மையென்பது ஆன்றோர் கொள்கை.

முதிர்ச்சியுற்ற வித்துக்கள், அதனதன் தன்மைக்கேற்ப, உலகில் பறந்து முளைக்கொண்டு கவையாகிக் கொம்பாகி காட்டகத்துள்ளும் நாட்டகத்துள்ளும் பரந்த நிழல்தரும் தருக்களாக இயங்குவதும், தத்தம் குலத்தை விருத்தி செய்வதும் கண்கூடாக்காக்ஷி. "ஒரு முதலே பன்முதலாய் விளையும்" பான்மைத்தாய ஒருதனி யெனவிளங்கும் இயற்கையின் தத்துவம் அது. அவ்வித்துக்களைப் பரப்புதற்கு காற்றும், மிருகங்களும் எங்ஙனம் உதவுகின்றன என்பதை நாம் நேரில் காண்கிறோம்.

அங்ஙனமே, பேதைமையிற் சிக்குண்டு, உழன்று, வருந்தி மலபரிபாகமுற்ற பக்குவ ஜீவர்களையும் அவரவர் நிலைக்கேற்ப

ஆட்கொண்டு, வழிப்படுத்தும் முக்தர்களும் இவ்வுலகில் இல்லாமலில்லை. பண்டையகாலத்தோடு அத்தகைய பெரியார் காலம் தீர்ந்துவிட்டதென எண்ணும் மடமையிற் சிக்குண்டு பிதற்றும் அறிவிலிகள் இயற்கை-நியதியை உணராதவரேயாவர்.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்" உண்டு என்பது தோற்றத்தைப் பற்றியதேயாம். தோற்றமெல்லாம் என்றும் சாசுவதமானவையல்ல: மாறுவதே அதன் இயற்கை. "Old wine in new bottles" என்பது போன்று, ஆதியற்ற பழமையானதே யெனினும் ஊக்கமும் உணர்ச்சியுந் ததும்பிக் கொண்டிருக்கும் தன்மையில் என்றும் புதியதாகவே ஒளிரும், 'சிவம்' 'முருகு' 'அருண்மயம்' முதலிய பல்வேறு காரணப்பெயர்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டு என்றும் ஒன்றுபோலவே நம்முள் இயங்கும் அந்த அந்தர் ஆத்மாவானது காலதேச வர்த்தமானங்களுக்கியைய தோற்ற வேறு பாட்டால் மாறுபட்டுக் காணுமிடத்தில் மயக்கமுறாது, உண்மையைக்கண்டு தெளியும் பான்மையில் ஒழுகுவதே இந்நாட்டு மரபாயிருந்து வந்திருக்கிறது. எனவேதான், தமது "தத்துவ மார்க்கத்தை" நம் பெரியோர் "சனாதன தர்மம்" எனப் பெயரிட்டு, வெளித் தோற்றத்தினின்றும் நமது லக்ஷியத்தைப் பெயர்த்து உள்

ளொளிரும் ஆன்மவியல்பில் நிலைக்கச் செய்ய வேண்டுமெனக் குறித்துள்ளார்.

அப்படி உண்மையைக் காண முயலுபவர் எமாருவண்ணம், கடவுளது அருள்-திறமெல்லாம் உருக்கொண்டு விளங்குபவர்கள் அங்கங்கே பக்குவ ஆன்மாக்களை ஆட்கொண்டொழுகிவருவதை இன்றும் நாம் பரக்கக் காண்கிறோம். மழைக்குக்கூட பள்ளிக்கூடத்தில் ஒதுங்காத ராமகிருஷ்ண பரமஹம்ஸரது அருண்மொழிகளெல்லாம் வேத வாக்காய் விளங்குவதைப் பார்க்கிறோம். அப்பெரியாரால் கடைத்தேறியவர் எண்ணிலடங்கார். இன்றும் திருவண்ணாமலையில் 'ரமண மஹரிஷி'' என்றொரு ஜோதி நாட்டின் பல பாகத்திலிருந்தும் பக்குவிகளை, காந்தமலையென்ன, இழுத்துக் கடைத்தேற்றிவருவதையும் காண்கிறோம்.

அத்தகைய ஜோதி ஒன்று, தம்மையண்டிவந்த பக்தர்களை அவரவர் நிலைக்கேற்பக் கடைத் தேற்றியிருந்து, இற்றைக்கு ஓராண்டுக்கு முன், பரவெளியில் இரண்டறக் கலந்து, உடலுறவிற் பிரிந்து வருந்தும் பக்தர்களது மனச் சாந்தியின் பொருட்டு அவரவரது மனத்தையே கோயிலாகக் கொண்டு விளங்கிவருகின்றது. அந்த விளக்கு என்றும் ஒன்று

போல் அங்கங்கே நிலைபெற்று, அவரவரை அவ்ரவர் நிலையில் முதிர்ச்சியுறச் செய்து, தன் மயமாக்கும் தன்மையை அவர்களும், அவர்களைச் சார்ந்த ஏனையோர்களும் அறிந்து இன்புறும் வண்ணம் அன்னாரை முன்னிட்டு இன்று நடக்கும் ஆராதனையில் இச்சிறு புட்பாஞ்சலியைச் சார்த்த முன் வருகின்றேன்.

அன்னார், தன் ஜீவதசையில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்ட முறையை ஈண்டுச் சிறிது கூறுவது மிகையாகா தென்றே எண்ணுகிறேன்.

இற்றைக்கு அறுபத்து மூன்று ஆண்டுகட்கு முன் தாது-ஞு ஐப்பசிமீ 1-உ யன்று இப்பூவுலகில் தோன்றிய "ராமய்யா" பாலியத்தில் பல இன்னல்களுக்குட்பட்டு வளர்ந்த விடத்தும், தனது சுதந்தர உணர்ச்சியில் மாத்திரம் சிறிதும் தளர்ச்சியடைந்தாரில்லை. அது காரணமாகவேகூட பள்ளிப் படிப்பும் மிகுதியாகப் பெறமுடியாமற் போயிற்று. எனினும், சுய முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் கல்வியில் மிக்காராகவே காணப்பட்டனர். கல்வியின் உட்பொருளை இயற்கையாகவே உணர்ந்தவராக விளங்கினர். கேள்விச் செல்வத்தில் பால்ய முதற்கொண்டே தேட்டமிகக் கொண்டிருந்தனர்.

இவரது மாதுலர் ஒருவர் இளமையிலேயே இவரது ஆற்றலை உணர்ந்து, வித்வத் சபைகளுக்கு உடன் அழைத்துப்போவது வழக்கம். அவரது பேராசியைத் தனது ஆஸ்தியாகக்கொண்டு, தான் சந்திக்கும் சாதுக்களது ஆற்றலைக் கூறிட்டு ஆராயும் பழக்கத்தை இளமை தொட்டே கைக்கொண்டுவிட்டனர். இருபது நிரம்பு முன்னமேயே வாழ்க்கைக் கடலுள் இறங்கி விட்டார்: ரெயில்வேய்க் கண்டிராக்டராக இருந்து பெரும் பொருளீட்டி பெற்றோரைப் போற்றிவந்தார். பின்னர், ரத்ன வியாபாரியாகவும் பிரைவேட் பீளீடர்ஆகவும் மதுரையில் வாழ்க்கை நடத்தி நண்பர் பலருடன் விளங்கினர். ஓரமயம், பெருத்த வக்கிலொருவரை யெதிர்த்து தாமே கேஸ் நடத்தும் பான்மையைக் கண்டு வியந்த ஜட்ஜ் முதலியார் ஒருவர், அவரது கூரிய விவேகத்தை மெச்சி, சட்ட நுணுக்கங்களில் மயிர் பிளந்து வியவகரிக்கும் ஆற்றலை தத்துவ விசாரத்தில் ஈடுபடுத்தி மேன்மையடையுமாறு பரிவுடன் வேண்டிக் கொண்டதையே காரணமாகக்கொண்டு, பாஸ்கர சேதுபதி யின் பேராற்றலில் ஈடுபட்டவராய், வாழ்க்கைக் கடலுள் கை கால்களைப் பரக்கவிட்டு, தெப்பக்கட்டையென, சர்வநியந்த வானபரந்தாமனது அருட்திறத்தில் தன்னைமறந்து, மிதக்கத் துவக்கிவிட்டார். தனக்கென ஒன்றும் வேண்டாராய்,

"வினையினளவே வியவகரித்து நிற்க விழைகின்றேனென்றறியும் விமலத்தாயே!" என்று பின்னொருக்கால் சிறப்பித்துக் கூறியிருப்பதொப்ப, அன்று முதலே தன் உடல்-பொருள்-ஆவியை தன் நாதனதாக்கி, அவன் சக்திபாய்தற்குரிய கருவியாகவே தன்னை ஆக்கிக்கொண்டார். அச்சமயமே, மாதுரு கைங்கரிய நிமித்தமாகக் கைக்கொண்டிருந்த இல்லாளுடன் தீர்த்தாடனம் பண்ணிவருங்கால் செந்திலம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகன் சன்னதியில் தன்னை மறந்து, தானான தன்மயமே அவன் என உணர்ச்சியிற் கண்டு, அத்வைத சிகாமணியாய் விளங்கத்துவங்கினார். அன்று கண்ட உண்மையையே தனது லக்ஷியமாகக்கொண்டு, தன்னை வந்து மோதும் எக்கருமத்தையும் அவன் ஒளிகொண்டு சுட்டு, அந்த மயமாக்கி, அவனையே தனது குருவெனமதித்து, ஞானயோகத்தில் திகழ்ந்து விளங்கினர். தான் கண்ட உண்மையை நாப்பறையாக நாடெங்கும் சாற்றி, தன்னையண்டிய பக்குவிகளையும் ஆட்கொள்ளும் கருமத்தில் அன்றே ஈடுபட்டு விட்டனர். அன்று முதல், இப்பெரியாரை "ஸ்வாமி ராமசர்மா" என எல்லோரும் அழைக்கத் தலைப்பட்டனர்.

அக்காலத்தில் தான், நாட்டின் நிலைமையை உணர்ந்து தேச சேவை மூலமும் தனது லக்ஷியத்தைச் சாதிக்கமுற்

பட்டனர். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவம் முதலியோர் கூட்டத்தில் ஒருவராய்ச் சிறிது காலம் உழைத்துவிட்டு, இவ்வுழைப்பு முற்றுப் பெறுதற்கு ஈசுவர-சக்தி மிகுதியாக விளங்க வேண்டுமெனக் கருதியே அதினின்றும் பின்வாங்கி, சேந்திலம்பதியில் சரண்புகுந்தார்.

அதன் பின்னர் மாயூரத்தின் பக்கத்தில் வழுவூரையடுத்துள்ள விளையாம்பட்டணத்தில் "ஸ்கந்தபுரி" யென ஓராசிரமங்கண்டு அங்கு குருகுல முறையில் கல்விபயிற்றி வைக்கத் துவங்கினர். சில ஆண்டுகளே அது நடக்கலாயிற்று. ஊழ்வினைவயப்பட்டு அன்னாரது சரீரம் தளர்ச்சியடையவே, பதினைந்தாண்டுகளுக்கு முன், அவர் ராஜபாளையத்திற்கு அழைத்துவரப்பட்டனர். அங்குள்ள சீடர்கள் அவர்களைப் போற்றி யாதரித்துவரலாயினர். இச்சமயத்தில் அவர்கள் வாயிலாக பலநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இயற்கையில் "சாரீர" தர்மம் பொருந்தியிராவிடத்தும், தனது விவேக முதிர்ச்சியால் சங்கித நுணுக்கங்களை நன்காராய்ந்து, சுர-லயஸ்தானங்களைத் தொட்டுக்காட்டிக் கேட்போரை ஸ்தம்பிக்கச்செய்யும் அவர்களது இசைஞானத்தைக் குறித்து ஏதும் எழுதத்தரமன்று. அத்துறையில் அவர்கள்

இயற்றியுள்ள பல சாகித்தியங்களை 1926-ம் வருஷத்தில் அவர்களது பக்தர்கள் தொகுத்து புத்தகவடிவாக வெளியிட்டிருக்கின்றனர். ஸ்கந்தபுரியில் மேற்கொண்ட கைங்கரியத்தையாற்றிவரப் பெரிதும் துணைநின்று, அன்னாரை அண்டிப் பெருவாழ்வடைந்த நாகம்மை யென்ற காயத்திரி தேவியார் அவர்களுடன் தர்க்க விமேவசனஞ்செய்து உண்மையுணர்ந்த வரலாறு, "ராமகீதோப நிஷத்து" என்னும் நூல்வடிவாக 1928-ம் வருஷத்தில் வெளியாயிருக்கிறது.

இவற்றை யனுசரித்த சில சாதன நூல்களும் வெளியாயிருக்கின்றன. தவிர, பற்பல காலங்களில் பற்பல நிகழ்ச்சிகளை முன்னிட்டு அவர்கள் இயற்றியுள்ள பல கவிகளும் கீர்த்தனைகளும் இன்னும் அச்சரங்கம் ஏறியாகவில்லை. பக்தர்களுது பக்க பலத்தைக் கொண்டு, விரைவிலேயே அவை முழுதையும் வெளியிடக் கருத்துண்டு. எனினும், தற்சமயம் இந்நந்நாளில் நாம் பாராயணம் செய்து சாந்தியுறுமாறு அவற்றுட் சில இதழ்களை மாத்திரம் இம்மாலையில் தொடுத்து உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன்.

உடல்-பொருள்-ஆவி மூன்றையும் சீடன் சற்குருவுக்கு அற்பணம் செய்துவிட வேண்டுமென்ற மரபின் தத்துவத்

தை வெகு அழகாக ராமகீதையில் விகசிதப்படுத்தியிருப்பதற் கொப்ப, தன்னையண்டிய சீடர்களது இக-பர நலன்களைக்கருதி அன்னார் பட்டிருக்கும் பாடுகளைத் கூறத்தரமன்று. அன்று, கண்ணன் சாக்ஷியாய், சூரியன் அஸ்தமிக்குமுன் ஜயத்ரதனைக் கொல்லுவது இன்றேல் இறப்பது என்று செய்த பார்த்தனது சத்தியத்தை அந்தக் கள்ளன் எப்படி நிலைநாட்டியுள்ளான் என்பது யாருமறிந்ததே. அப்படியே இன்றும் இப்பெரியார் தமது சீடர்களை ஆட்கொண்டுள்ளார் என்பது மிகையாகாது.

தேசவிடுதலைப் போரில் தான் நேரிடக் கலந்துகொள்ளு தற்குத் தான் சரீரதிடனில்லாத காரணங்கொண்டு பின் னின்றிருப்பினும், தனது உபதேச மொழிகளால் பலரை அத்துறையில் ஊக்கியும் வந்திருக்கின்றனர். இவ்விஷயத்தில் அன்னாருக்கிருந்துவந்த ஆர்வத்தை, ஸ்ரீராஜகோபாலாசாரியார் சென்ற 40-வது மாகாண மகாநாட்டுக்கு ராஜபாளையம் எழுந்தருளியசமயம், அவர்களுக்கு அன்னார் ஆசிகூறியளித்த உபசாரமொழியினின்றும் நாம் ஊகித்துக்கொள்ளலாம். அது கண்டு வருமாறு:—

தென்னாட்டுக் காந்தி யெனத் திகழுமுன்னைத்
திருச்சபையின் முதலமைச் சாய்த் தேர்ந் தெடுத்த
சென்னையிற் குடியொழித்துச் சிற்றி னங்கள்
சிறந்தொழுகக் கடன்சுமைதீர் க்ஷேமஞ் செய்து

பின்னும் அரிஜனங்க ளாலயத்துட்
பிறங்குதற்குப் பிரகடனஞ் செய்த நின்னைப்
பொன்னாடும் புகழாதோ! ராஜாஜியே!!
பூரித்த வென் னுசி வரவேற் பாமே!!!

"சர்வே ஜனு: சுகினே பவந்து!" என்பது வைதீக சாந்தி பாடம். அப்பொருளையே விகசிதப்படுத்தும் இப்பெரியாரது இந்த—

"ஐம்பொறியு மொன்றுபடி னகத் தினுள்ளே
யமைந்த ஜன்மயந்திர களனைத்தும் தோன்றும்,
உம்பருல கின்வழியு மங்கு தோன்றும்
ஒருமோக்ஷ விச்சையினுல் பிறவிதாண்டத்
தெம்பு கொளும் வடக்கந்தஞ் சுரங்கந் தோன்றும்
திருப்தியுறுஞ் சத்துவமும் சேர்ந்தவ்வாயுள்
வம்புசெறி-மனமறுத்து ஞானலோக
வாழ்வடைந்தும் அது நீயாய் வாழ்வைமாணு!

என்ற சாந்தி பாடத்தையே நமது ஆஸ்தியாகக் கொண்டு, அன்னாரைப் போற்றி வாழ்வோமாக.

சுப்பிரமணியபுரம் தெரு,
கல்லிடைக்குறிச்சி.
விக்ரமஹு ஆனிமீ சுக்-சப்தமி

இப்படிக்கு,
அடியார்க்கடியன்
சி. ஸுப்ரஹ்மண்ம சர்மா.

ஓம்:
ஸ்ரீ குருப்யோ நம:

அடிகளின் அரிய

திருவாக்குகள்.

காப்பு.

முத்தமிழ் கற்றிலன்
முறையோடு காவியப்
புத்தக வாயினுட்
புகுந்து பார்த்திலன்
சத்திய மானநற்
சாந்தியி லுற்றிட
நத்தினன் வள்ளியூர்
நற்றவக் குமரனே!

1. உபதேசப் பகுதி.

(மாட்டுக்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசம்.)

மாட்டுடலாந் தத்துவத்தின் கால்கள் நாலில்
மன்னியமுன் கால்களையே கரங்க ளாக்கிப்
பூட்டியுடல் வளர்க்கவொரு கருவி யாயும்
உத்தமனை யுருப்பொருளி லுபசரிக்கக்

காட்டியதோ டல்லாமற் கண்வா யைந்தாற்
கவருமொரு பொருளனைத்துங் கல்வி நோக்கு
மேட்டிமையாம் புந்தியெனும் விளக்கொன் றேற்றி
மேன்மையுற வைத்தவன்ஞுன் கருணை யென்னே! (க)

(மாட்டினின்றும் மேம்பட்ட தத்துவத்தை யுணர்ந்து, அவ்வாருக்கிய கடவுளுக்கு நன்றி காட்டாதான் கழுதைக்குச் சமமாமெனல்.)

ஊன்றிவந்த கால்களையே கரங்களாக்கி
யொருமனித வடிவமுற வைத்த வுன்னை
ஆன்றபுத்தி கொண்டங்கை சென்னி கூப்பி
யாட்படுதற் கலருத நன்றி யற்ருேர்
ஊன்பொதிந்த சுமைதூக்கும் கழுதை யாக
வுரை செய்யும் நீ சமைத்த வேத மென்னின்,
நானிகத்தில் என்செய்வேன் எவற்கு ரைப்பேன்,
நிலமெல்லா மீயவரு செந்தில் வாழ்வே! (உ)

(உயிரோம்பல் போன்று நடித்து, அதை நீத்து வயிறு வளர்க்கும் வஞ்சம்புரி மாந்தர் சங்கத்தை நீக்கவேண்டும்—என்றது.)

உயிரினை யோம்பலென்ற ஒரு வழக்கறத்துடைத்து
வயிறினை நிறைப்பதற்கே வந்ததாய் வாழுமாந்தர்
உயரிய உடுப்பைப் போர்த்தி யொருவஞ்சம் வினைவார் போலக்
கயவரா மிவரை நீக்கக் கருதலோர் கடமைமாணு! (ங)

(முமுக்ஷுவின் இலக்கணம்.)

பொய்புனைந் தாடுமாக்கை பொய்யெனத் தீர்மானித் தோன்
மெய்யுணர் கதிர் கொண்டேறிமிளிரும் நற்சோதிநோக்கி
யுய்வதே கருமமாக வுடல் பொருளாவி நீத்துச்
செய்தவ மிலங்க நிற்பார் சிறந்தமுமுக்ஷு மாணு! (௪)

(சாங்கிய மாணவனின் ஆசாரத்தையும் அவன் முடிவுறும் எல்லையையும் விளக்கியது.)

சாங்கியத்தின் ஆசாரம் சாற்றக் கேண்மின்
சாந்திபெறும் நன்னிலையம் பெயராவண்ணம்
பாங்கில் வரும் நித்தியனை மித்யத்தோடு
பறந்திலகு பிராரப்த மெதுவானாலும்
ஈங்குடலைத் தாங்கும்வரை யிறுதி நின்றே
இனிமை யொடு கருமமதை யப்யசித்து
தூங்குதலும் தூங்காத துரியா தீதத்
தொன்மையை நீ யாவதுதான் அறிவை மாணு! (௫)

(குணத்திரயத்தில் சாக்ஷியாய் நின்று தமோ குணத்தைஜயிக்க வேண்டுமெனல்.)

மிக்கவுப சாந்தமெனும் குன்றிலேறி
மிளிர்கின்ற புத்திக்கா திக்க மீய்ந்து
துக்கவுப தேசமொடு மனத்தின் றேளில்
தத்பதத்தின் செங்கொடியைப் பறக்க விட்டே

யெக்கருமத் துமிலங்கும் அவித்தை நீத்தங்
கிருப்பதெல்லா மான்மமய மாகநோக்கி
யொக்கவிசா ரம்நழுவா தொழுகு வாயேல்
உண்மையது வுனையடையும் உறுதி மாணா! (௬)

சாங்கியத்தில் விசார புருஷனின் லக்ஷணம்.

விசாரமுறு வன்பதவி வினவக் கேண்மின்
வித்தன்றி விளைபொருளே யின்றா லன்னான்
உசாவலெனு மொருசாவி கைப்பிடித்தும்
ஒன்றவரும் எவற்றையுமுட் டிறந்து நோக்கி,
பிசாசினிலும் ப்ரும்மமதைச் சுவீகரித்துப்
பேசாத ப்ரும்மமதாய் அனுசந் தித்தங்
குசாராகப் படிப்படியா யுயர்ந்து தானும்
ஒருபுருஷனாய் நிற்பன் உணர்வை மாணா! (௭)

பூதமதி லுட்புகுந்து பொருளை நோக்கப்
புத்தி யெனும் சிறுதீபம் பொலிதல் வேண்டும்
ஏதமுள பல்வகைகள் இருப்ப தேனும்
இயல்பிலுறு சிருஷ்டி யென வெளிதில் நோக்க
ஓதருமோர் ஞானவிசா ரத்தி யாற்றால்
ஓரடையா ளஞ்செய்தங் குண்மை நின்றும்
ஏதமெலாம் தாண்டினர்க்கல் லாதவ் வீடிங்
கிடர்ப்படும்,நா முழக்கத்தால் இயலா தன்றே! (௮)

(சாங்கிய மாணவன் பொருந்தத்தகாத சங்கம்.)

சத்தென்பர் சித்தென்பர் ஜடமே யென்பர்
சமர்த்தாக நூற் படித்துச் சமஷ்டி யென்பர்
வித்தென்பர் வித்தறியார் வியஷ்டி யுற்ற
விதமறியார் வேட்கையுறு மனத்தின் வீறைச்
சத்தசத்தாய்ச் சாற்றிடுவர் சங்கை யுற்றால்
சாக்ஷியென வேதமதைச் சார்வார் சங்கம்
ஒத்ததின்று முண்மை விசா ரத்திலுற்ற
வுன் போல்வர்க் கிதை நீத்தல் உயர்வு மாணு! (சஅ)

(ஞானிகளின் ஊழ்வலிக் கூற்று.)

கரிவருகை மணியோசை காட்டல்போன்று
கல்விமனத் துறவுடையார் கட்கு மூழ்பின்
திரிசயத்தி னுட்புகுந்து திகழுமேனும்
தெய்விக சாக்ஷியது குன்று தாகும்,
விரிந்த மனம் போலாகும் விகற்பங் கண்டு
வினயமிலார் வேட்கையென விரைந்து சொல்வார்
வரிசையிதே ராகவன்றன் வாழ்வு முற்றும்
வழக்கிதனை நன்கோர்ந்து வளர்க மாணு! (ய)

—ஃ—

2. பிரார்த்தனைப் பகுதி.

நெல்லை நகர்த் தமிழ் வித்துவான் மந்திரமூர்த்தி ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதரான ப்ரஹ்மஸ்ரீ:
ரா. முத்தையரவர்களால் இயற்றப்பட்ட சாற்றுக்கவி.

அறுசீர் விருத்தம்.

இரவிநற் குலத்து தித்த விராமநற் சரிதை தன்னை
விரிந்தபல் பொருளின் முன்பு விரித்தனர் முனிவ ரேனோர்:
பிரவுமக் கதையை யிங்கு நினைப்பி லான்மீக மாகச்
சுருக்கினன் நவநீதம் போற் சுவைத்திட ராம சர்மா.

கலி விருத்தம்.

கந்த வேளின் கருணை கனிந்திட
பந்த நீங்கிப் பயன்மிக நல்கவே
கந்த மோங்கு கடம்பற்குங் கூடவே
செந்தி னிற்பதிகஞ் செப்பின னன்றே!

I. ஆத்மீக ராமாயணம்.

அயோத்தி யென்பது யுத்தத்தாற் சேதிக்கப்படாததென்றும், தசரதற்கு, தன்னுள் மறைவுற்றிலக்கும் ஆன்மா சுருதி வாக்கியத்துக் கிணங்க உலகம் உய்யுமாறு வந்த அவதார மென்றும் காட்டி அவர் சரிதையின் சுருக்கம் கூறப்படுகிறது.

திருவளர் அயோத்தியிறை தசர தற்குத்
தினகரனே யீன்றதொரு தெய்வந் தானே
யுருவெடுத் திராமனென வொருநா மத்தால்
உலகோர்க்கிங் குண்மையுப தேச மாக
வருநடையிற் காட்டியவவ் வள்ளல் பாதம்
வலிபுயத்தின் கோதண்ட மிவைக டம்மில்
மருவுமனம் பற்றிடவே மகிழ்ச்சி யோடு
மாலாகி மலர்ந்ததவன் சரிதை தானே! (1)

ஜன்மமெடுத்த அன்னூர், உயரிய நீதி முறையில் சாதன சதுட்டயத்தைத் தேடி மூவகைச் சாதனங்களேயும் அடைந்து மீண்ட பின்னர், தன்னுள் விசாரம் தோன்றி நேதி செய்து மேலெகும் தருணத்தில், வசிட்டர் பார்வை வினேவயத்தால் கிட்டவும் குருவுபதேசம் பெற்று சத்திய நெறியில் நின்றதைக் குறிப்பிடுகிறது.

மூர்த்திதலம் தீர்த்தவழி முறையே யெய்தி
முக்குணத்தின் தொழிலாற்றில் முனைந்தெ
[திர்த்துக்
கீர்த்தியுறும் கேள்வி தன்னுட் கிளப்பி மேலாம்
கின்னரியின் தந்திதொனிக் கிச்சை யுற்றுப்

பார்த்திபனிப் பக்குவத்திற் பரிதி காணப்
பயணமுறு மவத்தைதனில் வசிட்டர் பார்வை
நேர்த்தியொடு கிட்டலுமே நிர்த்துவந்த் வத்தின்
நியதிபுறுஞ் சகஜமதில் நிலைத்தான் போற்றி! (2)

இல்லறத்தில் மாதர்-பிதுர் கைங்கரியம் முகலாய ஜுவகைத் தவம் நடத்தும் பொருட்டும், சுக்கில-சுரோணிதக் சேர்க்கையில் விளையும் இன்பநுகர்ச்சியின்கண் சாக்ஷியாய் நின்று தன்னிலையில் தானாய் அமர்ந்து காட்டி ஜகத்திற்கு நிரூபணம் செய்யும் பொருட்டும் வேட்டல் புரிந்த வரலாறு கூறப்படுகிறது.

சுக்கிலசு ரோணிதத்தின் சுகத்தில் மேவிச்
சுகித்திடினுந் தன்னிலையாஞ் சுபத்தை மாற்று
மிக்கசுப மேவியபின் மீளா நிற்கும்
மேன்மையதைக் காட்டுதற்கு மெல்லி யங்கை
தக்கதெனக் கைப்பிடித்து தவத்தி னுக்கும்
தனித்திலகுஞ் சாக்ஷிக்குந் தடைசெய் யாது
பொக்கிஷமாஞ் சீதையொடு பொருந்தி நின்ற
புனிதமலர்ப் பாதவிணை போற்று வேனே! (3)

தன் இளைய சகோதரர்களிடத்திலும், காடாளக் கட்டளை யிட்ட தந்தையிடத்திலும், அதற்குக் காரணமாய் நின்ற கைகேயி னிடத்திலும், நிரபராதியாய் நின்ற தன் சொந்தத் தாயினிடத்தும்

காட்டிய நேசத்தையும், இதுபோலவே வனசஞ்சாரத்தில் ஆங்காங்கு நடைபெற்றதுமான நேச முறையையும் விளக்குகின்றது.

இளையரின முறையரெனு மிகழ்ச்சி நீத்தே
யிருவகையாம் மானிடருள் எவர்மாட் டுந்தன்
உளமதனில் உயிரின்பா லுறைந்த வன்பால்
ஒருசக்ய சமத்துவத்தை யுபயோ கித்துப்
பிளவுபடாப் பெருங்கருணை வெள்ளம் பாய்ந்து
பேசரிய பக்குவத்திற் கேற்ற வாறு
களவுறுபல் லவத்தைகளைந் தாளும் பான்மை
காட்டியபொற் கழலெனைக் காக்க வாழி. (4)

ஜீவத்தன்மையில் எந்த உயிரேயாயினும் உடலுக்குள்ளிருக்கும் அதன் மனோதத்துவத்தை ஆய்ந்து அதை முக்திக் கீர்த்தல் உலகிலுறையும் சாதுக்களுக்குக் கடனுமெனத், தான் அம்முறையை அநுஷ்டித்து, விலங்கினத்தோடு உறவு செய்து இதோபதேசம் அருளி நடைபெற்றதான பான்மையை விளக்குகிறது.

வினைவசத்தால் விலங்கினத்தில் விளைந்திட்டாலும்
விழைந்தவன்பின் விருத்தியினல் விமல வாழ்வு
பனையனைய வேர்வீழ்ந்தும், பரிச யத்தாற்
பரிதிபரந் தொளிராத பகையுண் டென்று

முனைந்ததனை மூதறிஞர் முயற்சித் தங்கு
முக்தியளித் தாளும்வகை முறையைக் காட்டிப்
புனைந்துமடி முடிவைத்துப் பொருளாய் நின்றோர்
புகழ்படைத்த ராகவன்றாள் போற்று வேனே! (5)

உத்தமமான சத்துவகுணத்தில் ஈடுபட்டவர் ஆத்மஞானத்துக்குப் பக்குவியாதல் போலவே, மிகுதியும் தமோகுணத்தில் நிறைந்தவர்களும் (அதாவது, வாலி-ராவணன் போன்றோர்) ஆசாரியரது அநுக்கிரகத்துக்குப் பாத்திரர் ஆகக்கூடும் என்றும், மார்க்க பேதம் இருவகையில் நட்புமுறை ஒன்றும், உள்நட்பும் வெளிப் பகையுமான மற்றொன்றுமாகும்-எனக்காட்டி சத்தியத்தை நிலை நாட்டிய முறை கூறப்படுகிறது.

சத்துவத்தின் மிகுதியிலே சாந்தி தோன்றுஞ்
சகஜம்போற் சகளமுறுந் தாம தத்தும்
வித்ததுவும் வித்தகமாய் விளைவுற் றுடும்
விமலமதை வெளியாக்கும் வழியி ரண்டில்,
உத்தமமாம் சக்கியத்தில் உறவொன் றாயும்
உள்ளுறவும் வெளிப்பகையும் மற்றொன் றாகச்
சத்தியத்தைத் தாபித்த சதுர னென்னும்
சகஜவள்ளல் அடியிரண்டேன் சாந்தியாமே! (6)

ஆசாரியர் ஆட்கொள்ளும் வகையில், வாய்மொழியுபதேச மார்க்கமொன்றும், மற்றது சன்னிதான மாத்திரமாய் நின்று மோன வியாக்கியானஞ் செய்யும் மார்க்கமொன்றும் (உதாரணம்: வாலி, ராவணாதியர்) ஆக இருவகைத் தீக்ஷை முறையை எடுத்துக் காட்டியது.

ஆராயின், ஆட்கொள்ளும் வகையி ரண்டில்
அற்புதமாம் வாய்மொழியின் வழக்கொன் றோடும்,
சீரான செம்பொருளோ டுறைந்து நின்று
சிடனது மனக்கசடு சிதறுற் றோடிப்
பூராய மாமருளின் சக்தி யாற்றுற்
பொலிவுறலே மோனவுப தேச மென்று
தேருவது தீக்ஷைமுறை யெனக்கற் பித்த
தேசிகனை யுளத்திருத்தித் தியானிக் கின்றேன். (7)

ஆன்மாவினிடத்தில் ஐக்கியமுற்று ஜகத்தில் தன்னை மருவும் கருமாக்கள் சித்தின் லீலையாக மதித்து, சத்து-அசத்து என வியாபிக்காமல் எல்லாக் கருமங்களையும் செய்து சாக்ஷி நிலை குன்றாது நிற்பதை நிரூபித்தது.

அகத்துறையு மான்மாவி லைக்கிய முற்றே
யனைத்தினிலு மதுவதுவாய்ப் பார்த்துப் பின்னும்
சகத்துருவின் தோற்றமெலாம் சின்ம யத்தாற்
சரித்திலங்கும் லீலையெனச் சாக்ஷியாகி

மகத்துவமாம் இங்கிலையில் மன்னலோடு,
மருவுகரு மங்களிலிம் மகிழ்ச்சி குன்றா
திகத்தினிலே யிம்முறையில் இறுதி நின்ற
வென்குருவா மிராமனடி யிறைஞ்சினேனே. (8)

ராம-நாம பஜனத்தால் அடையும் பயனை, ராமாயணம் எழுதிய வான்மீகி-கம்பநாடர் வரலாற்றின் மூலம் நிரூபித்தது.

இழிவுறுமோர் தொழிற்செய்த வொருவன் காதில்
ஈரெழுத்தை யிணைத்தங்கே யியம்பக் கேட்டுப்
பழுதறநன் முனியாகிப் பரத்தி லுற்றுப்
பாரிலுளோர் அறிவதற்குப் பரந்த நூலாய்
வழிமுறையா மிராகவன்றன் சரிதை யென்ன
வழுத்தியவான் மீகிவளர் கம்பநாடர்
எழுதியதில் நாமத்தின் *லக்ஷியத்தால்
இயம்புமொரு வீடெனவே யேற்றல் சாலும்! (9)

இருவிதத் தன்மையிலும் பிரபுவாய் விளங்கியவிடத்தும், அச் செருக்கை அறுத்து, தாங்குதற்கு அரிய எக்கருமம் நேரினும் அதை உதாசீனமாய் மகிழ்ச்சி குன்றாது நின்று செய்து வந்ததையும் கூறியது.

(*) ராம-என்ற ஈரெழுத்தாய சொல்லில் தத்பதார்த்தத்தைக் கண்ட லக்ஷியத்தால்.

வள்ளனுக்கு வள்ளமெலன வடிவெ டுத்து
வளர்செருக்கை வாள்கொண்டு வீழ்த்தி மேலும்
தள்ளாம லெத்தனையுந் தாங்கித் தாங்கித்
தந்தைதாய்ப் பேணென்ற தவமி யற்றி
யெள்ளாத நடைசென்றிங் கிகத்தோ ருய்ய
வியல்புறுபல் லாற்றானும் இதமே செய்து
விள்ளாது விண்டரசு நாய கன்றாள்
விமல முறும் வாழ்வீய வேண்டு வேனே! (10)

இவ்வரிய நூலைப் பாராயணம் பண்ணுவதின் பயன் கூறப் பட்டது.

இருண்டநிறத் தாழ்வலியி னிடர்தீர்த் தற்கே
யியம்புமிரா கவன்சரிதை யிதனை யுன்னித்
தெருளமுத மாய்நாவாற் றுதிப்போர் கட்கும்
திருப்தியுற மனமுவந்து தியானிப் போர்க்கும்
குருமொழியா லிதன்குஹ்யம் குறிக்கொள் வோர்க்கும்
குறைவில்லா நிறைவுறுமா செல்வங் கூடித்
தெருளுறுநல் லாத்மீக வழியுங் காட்டித்
திகழவைக்கு மிஃதன்பெருமை தெரிவர் யாரே! (11)

(ii) திருச் செந்திற் பதிகம்.

காப்பு.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

பேசாது மோனமுற்ற பெரியோர் கட்குப்
பிறங்கவரு பிரணவமாய் நிற்ற லோடு
பாசாட விக்குளே பரித விக்கும்
பாமரர்க்குந் தந்திமுக மாகி வந்த
வீசாவுன் சோதரனா யிலங்கு கின்ற
வெனதுகுரு முருகனுக்கிங் கிசைத்த பாக்கள்
வாசாவி னிலக்கியத்தை நீத்து மேலாம்
வழிதுறக்க வுன்பாதம் வணங்கு வேனே!

கலி விருத்தம்.

1. பொய்ம்மை யாளர் புகும்வழி நீத்தியான்
மெய்ம்மை யாளர் மிகுசங்க மேவற்குச்
செய்ய வுன்னடிச் சீரினைத் தேடினேன்
தெய்வ மேதிருச் செந்தில்வாழ் தேசிகா!

2. பாழை யுண்ணப் பகைசெயும் வன்மனப்
பேழை தன்னை யுடைத்துப் பெரியதோர்
மாழை நன்மணி மன்னுமோர் பேற்றினை
யேழைக் கீய விறைஞ்சினேன் சற்குரு!

3. வேலை சூழ்புவி யாகூழியை யியினும்
மேல தானபன் மேன்மைகள் மேவினும்
கோல மாமறை கூறிய வவ்வொளி
சால வெஃகிலார் சாந்தி யுறுவரோ!

4. ஆல முமமிழ் தாயுண்ட வாயதால்
நாலின் சாரம் நவின்றிடும் நன்மொழிப்
பால மேற்றிப் பரத்தினில் வைத்திட
மேலு மேலு மிளிர்வைசெந் தூரைய!

5. வேத நான்கின் விளைபொரு ளாயினும்
ஓது முண்மை யொளியென வோர்தலால்,
ஏத முற்றுமஃ தில்லென நின்றிட
நாத வுன்றிரு நாமம் நவில்வனே.

6. பற்று நீக்கிடப் பற்றின பற்றையும்
குற்ற மாமெனக் கூறிடி னத்தையும்
நிற்றி டாவணம் நேதிசெய் தேயெனைப்
பற்று வாய்பர மேகுரு வள்ளலே!

7. மீண்டு மீண்டுமி ளிர்கின்ற மாயையைத்
தாண்டு மோர்சொலிற் றுண்டவ மாடுவோய்!
பூண்ட தருக்கையும் பொய்யெனக் காட்டுமெய்
யாண்ட வாவுனை யாரறி வார்கொலோ?

8. கால னேது கவிழ்ச்சியும் வீழ்ச்சியும்
ஞால மேதுநன் ஞாயிறென் றுய்த்திகழ்
சால ஜோதிசாம் ராஜ்யச மத்துவக்
கோலங் கூட்டுகு மாரந மோநம!

9. பாலே மாவனப் பண்பினை யொத்தது
சீல மோடுசி றப்பிற் சிறந்தது
மேலே கீழை யலாதுமி ளிர்ந்தது
சோலே யாமொரு ஜோதிவி லாசமே!

10. இந்த நற்பதி கத்தினி லேயுறுஞ்
சுந்த ரத்திற்சு கித்துச்சு பாவமாம்
அந்த ரங்கத்த மைதிகொள் வார்முனே
செந்தில் வேற்கரன் செய்துணை தோன்றுமே!

திருச் செந்தில் மாதப்பதிகம்.

பேசாத மோனம் பிறங்கும் பிரணவம்நீ
வாசாம கோசரமாய் வாழ்முதல்நீ—ஆசானும்
அண்ணலயிற் சேவகன்மேல் அற்புதமாய்ப் பாப்பகர
வண்ணமுளோய்! நீவழங்க வா!

நித்திரை யும்நின தாமருள் வாரியில் நீக்கமறச்
சுத்தநற் சத்துவ மாகியு றங்குசு பாவமதை
யத்தநீ தந்தனை யேனுமென் னூழ்வலி யொத்திலங்கச்
சித்திரை மாதத்தி லேவரு வாய்செந்திற் சேவகனே! (1)

கைகால்க டுக்கிக் கனிந்தாடு கின்றவுன் காரணத்தை
மைகாவின் மன்னு மனிதருள் யாவர் மதிப்பவரே
சைகாவி தென்று சமர்த்தாகக் காட்டுஞ் சரணமதை
வைகாசி மாதம் வருவாய் வழங்க வளர்குகனே! (2)

மானியென் றோதி மயிர்ப்பால மேகட்டி வாழ்வதொடுந்
நானில மிக்க நவதான்ய மெய்தி நல்லவர்போல்
ஊனது போற்று முலகா யதரோ டுறவறுத்திங்
கானிநல் மாதம் வருவாய் எனதுமுன் னுண்டவனே! (3)

ஆடிடும் பாவையிம் தைவகை பூதத் திலாயதனுள்
நீடிய ஜோதி நிரந்தர மாயொளி நீண்டிலங்கக்
கூடிய நல்லனு பூதிதந் தாளுங் குருபரனாய்
ஆடிநல் மாதத்தி லேவரு வாயயிற் சேவகனே! (4)

பாவணி தோளும் பரந்தநன் மார்பும் பரந்தகிரி
காவுறை கன்னி மணங்கமழ் கந்தயோ கீச்வரவுன்
சேவடி பற்றுஞ் சிறப்பினி லும்வினை சீறுதலை
யாவணி மாத மறத்துடைத் தென்றனை யாளுவையே! (5)

பிரட்டாசி கூறிப் பிணமா முடலிற் பிரியமுற்றே
யருட்டாக மற்றிங் கலைவார்கள் தம்மு ளமைந்தவென்னைப்
பொருட்டாக்கி வந்து புகழ்வீச வென்னுட் புகுந்தகுரு!
புரட்டாசி மாதம் வருவாய் திருச்செந்திற் பூரணனே! (6)

ஐப்பசி யால்வருந் தாதணி மாதிய ணைத்திடுெ
வைப்பைசி ரென்றனை வாழ்த்திமேல் வாழ்த்தி வருங்கவிகள்
கைப்பன வாயினுங் காமுறு சேயனைக் காப்பதற்காய்
ஐப்பசி மாதம தேவரு வாயயிற் பூண்டவனே! (7)

பார்ப்பவர் யாவரும் பாலனென் றேதரும் பக்குவத்தே
யார்த்தயில் விட்டசு ராதியர் மாளவன் ஞர்கிரியும்
சேர்த்துத்து ஊத்தநின் சேவல ணிக்கொடி யும்பறக்கக்
கார்த்திகை மாதத்தி லேவரு வாய்கதிக் காவலனே! (8)

சீரெனுஞ் சேண்மையைச் சீயெனத் தள்ளி சிற் றின்பம்வெஃகி
நீரொடு பாலபி டேகமே செய்து நினைத்துதிக்கும்
பேருட னேகல வாதவ னுய்த்தவிக் கின்றவென்முன்
மார்கழி மாதத்தி லேவரு வாய்மறை வாய் மொழியோய்! (9)

பைமாற லாற்படும் பாட்டையிங் குன்னியென் பாழுமனம்
மைம்மாற்றங் காண மயலாகி யுன்னையே மன்னுதலால்
கைமாறி லாவீடு காட்டுங்கு மாரநற் காவலனே
தைமாசம் வந்தித் தமியேனை யாளுவை தற்பரனே! (10)

காசே யிலாமற் காம்வீசி வாழக் கருணைசெயும்
ஆசா ரியாவுன் அருள்வீட்டில் வைத்தங் கமுதளித்துப்
பேசா னுபூதி பெயரா தொலிக்கப் பிறங்கவரு
தேசே றுமாசித் திருநாளி லென்முன் திகழுவையே! (11)

அங்கிங்கெ னுதவ கண்டித மானவுன் னற்புதத்தை
யிங்கா ருரைக்க வினிமே லுளாரென வேங்குமென் றன்
பங்கே யிருந்தருட் பாவன மேதந்து பார்புகழ
பங்கூனி மாதத்தி லேவரு வாய்பர சற்குருவே! (1

Om:

1. Be happy that thou art.
   See not back: Self you are,
   Self you are, Self you are. —Be happy.....

2. You are in body,
   You are not body.
   You deny, You deny, You deny! — Be happy...

3. You can see the change,
   You will not be changed,
   You are true, You are true,
   You are true. — Be happy......

4. Names and forms are false,
   Ram's Messages say.
   Damn it's, Damn it's, Damn it's–Be happy.....

—o—

ஓம்: சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நவக்கிரஹப் பிரார்த்தனை.

ஜீவர்களின் ஊழ்முதலைச் செப்ப னிட்டுச்
சிறுகுறிப்புப் பேரேட்டாற் செலவ ழித்தும்
பாவ புண்யப் பகுபாட்டைப் பகுத்து மாங்கே
பலகோள்கள் உறவுபகை நீச மாகக்
கேவலந்தி சாகாலக் கிழமை பூண்டு
கின்னரியின் தந்திதொனி கிளம்பல் போல
ஈவதொன்றும் துடைப்பதொன்று மாகக் கொண்ட
இனியநவக் கோள்களடி இறைஞ்சி னேனே. (1)

கோள்களுக்கு நாயகமாய்க் கூறுகின்ற
குற்றமிலாத் தெய்வங்கள் முற்று மிந்த
நாட்டொடங்கி யெந்நாளும் நன்னு ளாக
நயப்பதற்கும் நானிலத்தார் ஓடி வந்து
வேட்கையுடன் வேலனடி வீழ்வ தற்கும்
வீழ்ந்தபின்னர் விபரீதம் துடைத்தா னென்றும்
ஆட்படுத்தும் ஆறுமுகன் இவன்தா னென்றும்
அவனியுற வாய்க்கொள்ள வருவீர் கோள்காள்!!! (2)

ஆனவென் னூழினுக் கனுசரித்
தாடல்செய் அன்பார்ந்த கோள்களே யான்
ஈனமுற் றிங்கிருந் திதுகாறும்
ஈசனை யிறைஞ்சுதற் கிடமின்றியே
ஊனமுற் றுருகியேயொரு பேருட் கருந்தி
யோதுமோ ரேழை யென்பால்
தானமாய் இகபரத் தத்துவம்
ஈயவுந் தாள்களே தஞ்சமாமே!!! (3)

ஓம்:

ஸ்ரீ குருப்யோ நம:

ப்ரஹ்மஸ்ரீ: ஸ்வாமி ராமசர்மா அவர்களின்

நினைவு மலர்.

விருத்தம்.

கொல்லமா யிரத்தின் மேலோர் குறித்தவைம் பத்திரண்டில்
நல்லவைப் பசியில் திங்கள் நற்கன்னி மேவு நாளில்
தொல்லுல குதித்தே வேதந் துலக்கிடு மந்தந் துய்த்தே
வல்லிரு ளகற்றுந் தூயோன் வரன்ராம சர்மவேதன். (1)

வேதமு மந்தத் தோடு விளக்கியே நாத போத
கீதத்தின் தத்து வத்தைக் கிளப்பியே யோக மேவும்
ஏதுவை யெவருங் கேட்க எடுத்துவா தித்துமே ராம
கதையு மாதி நூற்கள் கிளந்துல கோர்க்கே யீந்தான். (2)

பிரமத்திற் கலந்த நாளும் பிரமாதி யாணி வெள்ளைத்
தரமுறு மேழில் தோன்று தக்கநன் ஞாளில் தானே
உரமுற்ற தத்து வங்கள் உகந்திடப் புகழ்ந்த செவ்வேல்
முருகன தடிச்சோ திக்கே முன்னினு னருள் காப்பாமே. (3)

ஜனனம்: கலி 4978—தாது-ஸு ஐப்பசி-மீ 1-உ உத்தரம்.

பரிபூர்ணம்: கலி 5041--பிரமாதி-ஸு ஆனி-மீ 9-உ சுக்ல-ஸப்தமி உத்தரம்.

ராஜலக்ஷ்மி பிரஸ், கல்லிடைக்குறிச்சி.